வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C. No.142/2021

வழக்கு சாட்சி – PW –8

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திருமதி.லெட்சுமி | தொழில் | :: |
| த/க பெயர் | :: க/பெ.சுப்பிரமணி | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 07.10.2024.

1, 2 எதிரிகள் ஆஜர்

**முதன்மை விசாரணை** (நேரம் : பிற்பகல் 04.10 மணி)

நான் தற்போது மண்டபத்தில் குடியிருந்து வருகிறேன். அ.சா.1 மோகன்ராஜ், அ.சா.3 சாந்தி, அ.சா.2 பத்திரகாளி ஆகியோரை தெரியும். அவர்கள் வீட்டில் தான் நான் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். 1ம் எதிரியின் அம்மா வீட்டில் தான் குடியிருந்து வருகிறேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. நான் அப்பளம் வியாபாரம் செய்து வருகிறேன். நான் மதுரைக்கு வியாபாரத்திற்காக சரக்கு வாங்க சென்றுவிட்டேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கோரியதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:

போலீசார் விசாரணையில் கடந்த 30.03.2021ம் தேதி காலை 11.00 மணியளவில் மோகன்ராஜ் வீட்டின் முன்பு சத்தம் கேட்டு நானும் தேவியும்

சென்று பார்த்தபோது 1ம் எதிரி கௌசல்யா மோகன்ராஜின் மனைவி செல்வியை பார்த்து கெட்ட வார்த்தையில் திட்டியதாகவும், 2ம் எதிரி கையில் வைத்திருந்த அரிவாளால் அவர் அழைத்து வந்த மற்றொரு நபருடன் சேர்ந்து மோகன்ராஜை அரிவாளை காட்டி மிரட்டியதாகவும், உன்னை வெட்டி கொன்றால் தான் சொத்து கிடைக்கும் என்று சொன்னதாகவும், அ.சா.1 மோகன்ராஜ்க்கும் 1ம் எதிரிக்கும் சொத்து பிரச்சனை இருந்து வந்ததாகவும், சம்பவம் குறித்து நேரடியாக தெரியும் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை.

(ஒம்/–சி.மோகன்ராம்)<br>
தலைமை குற்றவியல் நடுவர்,<br>
இராமநாதபுரம்.

வாக்குமூலம்

தலைமை குற்றவியல் நீதிமன்றம், இராமநாதபுரம்

வழக்கு எண் S.C. No.142/2021

வழக்கு சாட்சி – PW –9

| | | | |
|---|---|---|---|
| பெயர் | :: திரு.சீனி | தொழில் | :: |
| த/க பெயர் | :: | வயது | :: |
| கிராமம் | :: | | |
| தாலுகா | :: | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 07.10.2024.

1, 2 எதிரிகள் ஆஜர்

**முதன்மை விசாரணை** (நேரம் : பிற்பகல் 04.16 மணி)

நான் தற்போது மண்டபம் அம்பலகார தெருவில் குடியிருந்து வருகிறேன். சா.ப.சா. 10 கருனாகரணை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் கடல் தொழில் செய்து விட்டு மறுநாள் காலையில் வீட்டிற்கு வந்தபோது மண்டபம் போலீசார் அங்கு வைத்து கையெழுத்து கேட்டார்கள். நான் போட்டுக்கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த **கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.4** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்க கோரியதன்பேரில் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

போலீசார் விசாரணையில் கடந்த 30.03.2021ம் தேதி மதியம் 01.00 மணியளவில் மண்டபம் காவல் நிலைய காவல் ஆய்வாளர் வளையல்

தெருவில் மோகன்ராஜ் வீட்டின் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அந்த பார்வை மகஜரில் நானும், கருனாகரனும் சாட்சியாக உடனிருந்து கையொப்பம் செய்தோம் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக எதுவும் தெரியாது என உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :–** இல்லை.

(ஒம்/–சி.மோகன்ராம்)
தலைமை குற்றவியல் நடுவர்,
இராமநாதபுரம்.